**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 100/2013 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Balamurugan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : **18-06-2019**

தாவா சொத்து எத்தனை லக்க சொத்துக்கள் என்றால் 2 லக்க சொத்துக்கள் ஆகும். நான் 2 லக்க சொத்திற்கும் சேர்த்து பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். 2வது லக்க சொத்து என்னவென்றால் எனது வீடு ஆகும். 2வது லக்க சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 17 மீட்டர் ஆகும். 17 மீட்டர் என்பது தென்வடல் அளவு என்றால் சரிதான். 16.6 மீட்டர் கிழமேல் அளவு ஆகும். 2வது லக்க சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியவில்லை. 1வது லக்க சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 17 மீட்டர் ஆகும். அது தென்வடல் அளவு ஆகும். 1வது லக்க சொத்தின் கிழமேல் அளவு எவ்வளவு என்றால் 16.6 மீட்டர் ஆகும். நான் சொல்லியுள்ள விஸ்தீரணம் பிராதில் 1வது லக்க சொத்திற்கும் 2வது லக்க சொத்திற்கும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ஏற்கனவே சாட்சியத்தில் சொன்ன விபரங்கள் தவறானவை. பிராதில் உள்ள விபரங்கள் தான் சரியானவை. நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சந்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றும்படி பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் பிரதிவாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றும், நானும் ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 2வது லக்க சொத்துக்கள் எனக்கு பாத்தியமானது என்பதை காட்டக்கூடிய வகையில் ஆவணங்கள் எதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வீட்டு வரி ரசீது, மின்கட்டண ரசீது மற்றும் தண்ணீர் இணைப்பு ரசீது ஆகியவற்றை தவிர உரிமை மூல ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றல் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி கார்த்தி வீட்டிற்கு மேற்கே

வீரப்பன் மகன் பாண்டி என்பவரின் காலி மனையிடம் உள்ளது. காத்தி வீட்டிற்கு கிழக்குப்புறம் வீரப்பன் மகன் தங்கப்பாண்டியன் என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். பாண்டி என்பவரின் இடம் வடக்கே ரோடு வரை உள்ளது என்றால் தற்சமயம் உள்ளது. கார்த்தி, பாண்டி மற்றும் தங்கப்பபாண்டி ஆகியோர்களது வீடு நத்தம் மனையில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். அதேபோல் எனது வீடும் நத்தம் மனையில் கட்டுப்பட்டது என்றால் சரிதான். நான் கூறிய தென்வடல் 17 மீட்டர் கிழமேல் 16.6 மீட்டர் என்பது எனது வீட்டின் மொத்த அளவு என்றால் சரிதான். எனது வீட்டிற்கு எத்தனை வாசல்கள் உள்ளது என்றால் 3 வாசல்கள் உள்ளது. அதில் ஒரு வாசல் தென்வடல் ரோட்டில் கிழக்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். அதேபோல் பின்புறம் தெற்கு பார்த்து 2 வாசல் கதவுகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீடு 2 மாடி கட்டிட வீடு என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடபுறம் தண்ணீர்வாட்டம் இல்லை என்றும், அது தென்புறம் தான் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் எனது வீட்டின் வடபுறம் கீழ்தளத்திலோ அல்லது மேல்தளத்திலோ ஜன்னல்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சந்து இடம் பொதுவானது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றல் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரிரசீதுகள் எனது வீட்டிற்குரியது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மின் கட்டண ரசீது மற்றும் தண்ணீர் வரி ரசீதுகள் எனது வீட்டிற்குரியது என்றால் சரிதான். தங்கபாண்டி வீட்டின் தெற்கு புற சுவற்றுக்கும் எனது வீடடிற்கும் இடையே எவ்வளவு இடம் உள்ளது என்றால் சுமார் 5 1/2 அடி அகலத்தில் இடம் உள்ளது. அந்த இடம் கடைசி வரை உள்ளது. அவ்வாறு 5 1/2 அடி அகலம் இடம் கடைசி வரை உள்ளது என்பதை தெளிவுபடுத்தும் வகையில் நீதிமன்ற ஆணையாளர் நியமனம்கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வீட்டின் வடபுறம் அரை அடி அளவுள்ள் இடம் நீங்கலாக அடுத்து பிரதிவாதி கார்த்தி என்பவர் வீடு கட்டியுள்ளார் என்றால் தற்சமயம் கட்டியுள்ளார். பிரதிவாதி கார்த்தி வீட்டிற்கு வாசல் கிழக்குபக்கம் உள்ளது என்றால் தற்சமயம் தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் அதை உருவாக்கியுள்ளார். கார்த்தி என்பவர் 5 1/4 அடி உள்ள இடத்தில் தான் அவரது வீட்டிற்கு சென்று வருகிறார் என்றால் நானும் அந்த வழியாக தான் சென்று வந்து பயன்படுத்தி வருகிறேன். எனது வீட்டிற்கு வடக்கு பக்கம் எந்த வாசலும் இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கார்த்தி

5 1/4 அடி அளவுள்ள இடத்தையும் சேர்த்து தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. கார்த்தி என்பவர் 5 1/4 அளவுள்ள இடத்தையும்சேர்த்து ஆக்கிரமிப்ப செய்து வீடு கட்டிவிட்டார் என்பது தொடர்பாக நான் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற கோரி பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன். நான் அவ்வாறு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் ஆக்கிரமிப்பு செய்து கட்டுவதற்கு முன்பே நான் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். நான் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கார்த்தி என்பவர் ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாக செயலுறுத்து கட்டளை பரிகாரமை கோரி பிராதை திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக வீண் வியாஜ்ஜியம் செய்கிறேன் என்றாலும் சரியல்ல. கார்த்தி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்படும் இடம் பொதுவான இடம் என விளம்புகை செய்யக்கோரி நான் எவ்வித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமான இடம் என்பதால் தான் நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கின் படி வீரப்பன் மகன் தங்கபாண்டி மற்றும் பாண்டி ஆகியோருக்கும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் அனைவருக்கும் உரிமை உள்ளது. அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அவர்களையும் வழக்கின் தரப்பினர்களாக சேர்த்து வழக்கு செய்திருக்க வேண்டும் என்றால் நான் எனக்குரிய பாதிப்பிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நானோ தங்கப்பாண்டி மற்றும் பாண்டியோ வழக்கு சொத்தை அனுபவம் செய்யாததினால் தான் அவர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்த்து பரிகாரம் கோரவில்லை என்றும், அதனால் வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது வீட்டின் மேல் பகுதி கோனார் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல. அது எங்களது பூர்வீக சொத்துஆகும். மேற்படி மேற்கு பக்கம் உள்ள சொத்து சம்பந்தமாக ஆவணம் உள்ளது என்றும், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மேற்படி விபரங்கள் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வடபறம் உள்ள 5 1/4 அடி அளவுள்ள இடத்தில் எனக்கு எவ்வித உரிமையோ அனுபவமோ பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை மற்றும் எனக்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், அதனை எக்காலத்திலும் அனுபவம் செய்து வரவில்லை என்றாலும் சரியல்ல. எனது

தந்தைக்கு 2 ஆண் மற்றும் 1 பெண் குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். அனைவரும் உயிருடன் தான் உள்ளனர். எனது உடன்பிறந்தவர்களுடன் பாக வஸ்தி ஏற்பட்டதா என்றால் இல்லை. எனது தாயார் உயிருடன் தான் உள்ளார். எனத தாயார் மற்றும் உடன்பிறந்தவர்கள் எனது வீடு சம்பந்தமாக விடுதலை ஆவணமோ வேறு எவ்வித ஆவணமோ எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு உடன்பிறந்தவர்கள் 4 பெண் மற்றும் 1 ஆண் வாரிசு ஆவார். எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர்களுடன் பாக வஸ்தி ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதே போல் எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் எனது வீட்டிற்கு எனது தகப்பனாருக்கோ அல்லது எனது குடும்பத்தினருக்கோ விடுதலை பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் தெரியவில்லை. எனது வீடு வாடிப்பட்டி டவுண் பஞ்சாயத்திற்குள் கட்டுப்பட்டது என்றால் சரிதான். தாவா சந்து இடம் வாடிப்பட்டி டவுண் பஞ்சாயத்திற்குள் கட்டுப்பட்டதா என்றால் இல்லை. அது எங்களுக்கு பாத்தியமான பொது சந்தாகும். மேற்படி சந்து பாதை வாடிப்பட்டி டவுண் பஞ்சாயத்திற்குள் கட்டுப்பட்டது என்றும், அதன்பேரில் வாடிப்பட்டி டவுண் பஞ்சாயத்து அலுவலரை தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எனது தாயரோ எனது உடன்பிறந்தவர்களோ பொது அதிகாரம் கொடுத்துள்ளார்களா என்றதால் கொடுத்துள்ளார்கள். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு எனது தாயார் மற்றும் உடன்பிறந்தவர்கள் மற்றும் தங்கப்பாண்டி, பாண்டி மற்றும் வாடிப்பட்டி டவுண் பஞ்சாயத்து அலுவலா் மற்றும் வாடிப்பட்டி வட்டாட்சியர் ஆகியோர்களை தரப்பினர்களாக சோக்காததால் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு வடக்கு புறம் உள்ள இடத்தை வீரப்பன் என்பவரும் பிரதிவாதியின் தந்தையும் தான் சட்டகாலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வந்துள்ளர்கள் என்றால் சரியல்ல. மேற்படி இடம் அவர்களுக்கு தனித்து பாத்தியமானது என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ய எவ்வித அதிகாரமும் இல்லை என்றும், எவ்வித வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி வீடு கட்டி வசித்து வருகிறார் என்றும், மேற்படி விபரங்களை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன என்றாடில் சரியல்ல. எனது வீட்டிற்கு வடபுறம் உள்ள இடத்திற்கு நான் கூட்டு உரிமையாளா் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி வீடு கட்டி அனுபவம் செய்து வருகிற விபரம் தெரிந்து தான் நான் நீதிமன்ற ஆணையாளர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரும் எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.

வாதி தரப்பு மறுவிசாரணை : **18-06-2019**

1வது லக்க சொத்து எது சம்பந்தப்பட்டது என்றால் சந்து பாதை தொடர்பானது. அதில் தென்வடல் அளவு 16.6 மீட்டர். 1வது லக்க சொத்தின் மொத்த பரப்பளவு 23 சதுரமீட்டர் ஆகும்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.

(ஓம்.). D. ராம்கணேஷ், எம்.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி